[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 4

கூடாது என்பதுதான் அதன் பொருள். அந்த அடிப்படையை மீறி விதிமுறைகளை மீறி, அத்தகைய ரெக்கார்டுகள் வைக்கப்படு மானால், அவைகளெல்லாம் அழிக்கப்பட வேண்டும், அது நடை முறைப்படுத்தப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின் றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறையிலே சப்-இன்ஸ் பெக்டர்ஸ் என்ற நிலைக்குப் பதிலாக, அந்த கை ரேகைகளை யெல்லாம் பதிவு செய்யக் கூடியவர்கள் 1971 ஆம் ஆண்டிலேயே ஃபிங்கர் பிரின்ட்ஸ் எக்ஸ்பர்ட்ஸ் தான் அந்தப் பணியினை மேற் கொள்வார்கள் என ஒரு முடிவினைச் செய்து, பதவியினையும் ஏற் படுத்தி, அந்தப் பதவியிலே உள்ளவர்கள் சட்டத்தின் அடிப்படை யில் அத்தகைய கை ரேகைகளைப் பதிவு செய்ய தற்போது இயலாத காரணத்தாலே, அந்த இயலாத நிலையை மாற்றுவதற் குத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. தற்சமயம் போலீஸ் ஆஃபீசர்கள் என்பதற்குப் பதிலாக,

"It includes Finger Print Experts of the Finger Print Bureau, Madras and of the single Digit Finger Print Section in the State of Tamil Nadu" என்னும் ஒரு புதிய திருத்தம் செக்ஷன் 2 (பி) ஆஃப் 33/1920-வது ஆண்டு மைய அரசு சட்டத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அவை அதை ஏற்கவேண்டுமென வேண்டுகிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஆ. இந்தோனேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தோனேசிய நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அம்மன்றத்தின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. கார்டிடியோ அவர்கள் தலைமையில் இங்கு வருகை புரிந்து நமது மாமன்றத்தின் நிகழ்ச்சிகளைப் பார்த்து கொண்டு இருக்கின்றனர். பேரவையின் சார்பில் அவர்களை வர வேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

A Parliamentary Delegation from Indonesia under the Leadership of the Deputy Speaker of the Indonesian Parliament, His Excelleny, Mr. R. Kartidjo, are now witnessing the proceedings of this House. I extend to them a warm welcome on behalf of this House.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS